# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.61/2026

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜ் | Father's Name | : | கணேசமூர்த்தி |
| Village | : | பேரளம் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 44 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 11th day of August 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பேரளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுபடி இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்டிருந்த சாட்சி பிடியாணையை இன்றைய தேதியில் Recall செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். நான் குடவாசல் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 10.11.2023 அன்று காலை 9.30 மணிக்கு நானும், முதல்நிலை காவலர் 1017 பாரதிராஜன் மற்றும் காவலர் 1076 குருசீலன் ஆகியோருடன் மதுவிலக்கு ரோந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.11 15:38:14 +0530

சம்மந்தமாக குடவாசல் காவல் சரகம் பெரும்படுகை அருகே கண்காணித்து வந்தபோது அங்கு குடுகாடு அருகே நின்று கொண்டிருந்த நபர் போலீசாராகிய எங்களை கண்டதும் தப்பி ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் கேசவன், த/பெ. வீரபத்திரன், வஉசி தெரு, பெரும்படுகை, வீதிவிடங்கன், நன்னிலம் தாலுகா என சொன்னார். அவர் குற்றவாளி என்பதால் அவர் நின்ற இடத்தை சோதனை செய்து பார்க்க சுமார் 15 லி. பிடிக்க கூடிய 11 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் 110 லி. பாண்டி சாராயம் இருந்தது. அந்த சாராயத்தை எடுத்து பார்க்க அது ஒரு வழக்கத்திற்கு மாறான நிறமும் முகர்ந்து பார்க்க ஒருவித விஷ நெடியுடன் கூடிய கெட்ட வாடை வீசியது. மேற்படி விஷ நெடியுடன் கூடிய பாண்டி சாராயத்தை வைத்திருக்க அவரிடம் எவ்வித உரிமமோ அனுமதியோ இல்லையென கூறியதால் மேற்படி எதிரியை காலை 10.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தும், போன் மூலம் அவரது மனைவிக்கு தகவல் தெரிவித்தும் மேற்படி விஷ நெடியுடைய பாண்டி சாராயத்தை அருந்துபவர்களின் உயிருக்கும் உடலுக்கும் கேடு விளைவிக்க கூடும் என்பதால் எதிரி வைத்திருந்த தடயத்தை மகஜரில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் 10.30 மணிக்கு அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சா.பொ.1

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.11 15:38:22 +0530

வரிசையை கைப்பற்றினேன். தடயத்திலிருந்து மாதிரிக்கு சுமார் 750 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் பாண்டி சாராயத்தை எடுத்து அடைத்து SHO சீல் வைக்கப்பட்டது. சா.பொ.1ன் புகைப்படம் **அ.சா.ஆ.6**. சா.பொ.1க்கான 65(B) இந்திய சாட்சிய சட்ட சான்று **அ.சா.ஆ.7**. சா.பொ.1ன் CD **சா.பொ.2**. சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.8**. 11.00 மணியளவில் அதே இடத்தில் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பாண்டி சாராயம் போக மீதமுள்ள 109 லி. பாண்டி சாராயத்தை Sec.32 TNP Act ன்படி அழிப்பு மகஜர் தயார் செய்து மேற்படி 2 காவலர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.3 அழிப்பு மகஜர் மூலம் கொட்டி அழிக்கப்பட்டது. பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் காலை 11.30 மணிக்கு நிலையம் வந்து குடவாசல் காவல் நிலைய கு.எண் 580/2023, பிரிவு 4(1)(aaa) r/w 4(1-A) of TNP Act ன்படி வழக்கு பதிவு செய்து எதிரியை திரேக சோதனைக்கு பின் பாரா வசம் ஒப்படைக்கப்பட்டது. நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.9**. 10.11.2023 அன்று முதல்நிலை காவலர் பாரதிராஜன், 2 ம் நிலை காவலர் குருசீலன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 04.01.2024 அன்று மீண்டும் 2 ம் நிலை காவலர் குருசீலனை விசாரித்தும், Junior Scientific Officer நாசிராபேகம், டாக்டர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்தும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.11 15:38:29 +0530

வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கையில் 6.83 மி.கி. அட்ரோபின் கலந்துள்ளதால் இந்த சாராயத்தை அருந்துபவர்களின் உயிருக்கு கேடு விளைவிக்க கூடும் என டாக்டர் கோபாலகிருஷ்ணன் வழங்கிய கருத்துரை **அ.சா.ஆ.10**. எனது புலன் விசாரணை முடித்து 04.01.2024 அன்று எதிரி மீது பிரிவு 4(1)(aaa) r/w 4(1-A) of TNP Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.3 ல் எவ்வளவு கொள்ளளவு அழிக்கப்பட்டது, யார் யார் சாட்சிகள் முன்னிலையில் அழிக்கப்பட்டது என்ற போதுமான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றால் தவறு, யார் முன்னிலையில் அழிக்கப்பட்டது தடய பொருள் என்ன என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.3 சட்ட விதி முறைப்படிபின்பற்றவில்லை என்றால் தவறு. சம்பவ இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடமாக இருந்தும் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் நான் போட்ட வழக்கை நிரூபிப்பதற்காக எங்கள் அலுவலர்களையே சாட்சிகளாக விசாரித்து பதிவு செய்யப்பட்டது என்றால் தவறு. என்னுடைய விசாரணை முறையனதும் சரியானதும் கிடையாது என்றால் தவறு. அந்த காலகட்டத்தில் விஷ சாராயம் அறுந்தி இறந்ததாக எந்தவொரு தகவலும் வரவில்லை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.11 15:38:36 +0530

என்றால் தவறு. கைப்பற்றப்பட்ட பொருள் சாராயம் அல்ல எனவும் நான் மாதிரி தயார் செய்து வழக்கிற்காக ஜோடித்துள்ளேன் என்றால் தவறு. புகார்தாரர், முதல் தகவலறிக்கை பதிவு செய்தவர், விசாரணை அதிகாரி அனைத்தும் நானே என்பதால் இவ்வழக்கு சட்டப்படி நிலைநிற்க கூடியதல்ல என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.08.11 15:38:42 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.